# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
# Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush, NSW 2140**
www.tsch.org.au info@tsch.org.au


## பேச்சுப்போட்டி 2020 ஒன்பதாம் வகுப்பு

அனைவருக்கும் வணக்கம்

## தமிழ் இலக்கியங்கள்

காலத்தின் கண்ணாடி இலக்கியமாகும். இலக்கியம் என்ற சொல்லை இலக்கு, இயம் என்று பிரிக்கலாம். எனவே இலக்கை இயம்புவதும் இலக்கியமாகும். ஒரு கால இலக்கியம், அக்கால மக்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. சங்க காலத்தில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் தோன்றின. அவை அக்கால மக்களின் வாழ்க்கையில் பிரதானமாக இருந்த போர், வீரம், அன்பு என்பனவற்றைக் கூறுகின்றன. சங்க காலத்தைத் தொடர்ந்து வந்த காலம் சங்கமருவிய காலமாகும். அக்காலத்தில் தோன்றியது திருக்குறள். அது மக்களை நல்வழிப்படுத்தும் இலக்குடன் எழுதப்பட்டது.

தமிழ் இலக்கியங்கள் கவிதை, நாவல், சிறுகதை, நாடகம், திறனாய்வு என ஐந்து வகைப்படும். இவற்றில் காலத்தால் முந்திய இலக்கிய வடிவம் கவிதையாகும். தமிழ்ப் புலவர்கள் பனை ஓலையில் எழுத்தாணியால் எழுதி, கவிதை வடிவில் ஏராளமான இலக்கியங்களை உருவாக்கினர். சிலப்பதிகாரம் என்ற காவியம் இளங்கோவடிகளால் எழுதப்பட்டது. திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது. கம்பராமாயணம் கம்பரால் பாடப்பட்டது. இவையெல்லாம் கவிதைகளாகவே இருந்தன.

ஐரோப்பியர் வருகையின் பின்னரே நாவல், நாடகம், சிறுகதை என்பன தமிழில் எழுதப்பட்டன. அவர்கள் காகிதம், அச்சியந்திரம் என்பவற்றை அறிமுகப்படுத்தினர். எனவே தமிழ் இலக்கியங்களும் காகிதத்தில் அச்சடிக்கப்பட்டன. பிற்காலத்தில் ஒரு ஆக்கத்தின் குறை நிறைகளை ஆராய்கின்ற திறனாய்வையும் இலக்கியமாக ஏற்றுக்கொண்டனர். உலகத்திலுள்ள மொழிகளில் மிகவும் பழமையான மொழி தமிழ் மொழி. செம்மொழி என்ற சிறப்பைப் பெற்ற மொழி எம் தாய் மொழி. தமிழ் அன்னைக்கு புலவர்களும், கவிஞர்களும், எழுத்தாளர்களும் அணிவித்த ஆபரணங்களாக தமிழ் இலக்கியங்கள் மிளிர்கின்றன.

நன்றி
வணக்கம்